# UNIT – V

## Political Geography of India: Integration of Indian states – Integration of Sikkim – India's bilateral relationship with China, Pakistan and Sri Lanka – SAARC countries - India's foreign policy.

## இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பு

1909 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவும் சுதேச அரசுகளும்

1947 ஆம் ஆண்டின் சுதந்திரத்துக்குப் பிறகான உடனடிச் சூழல்

இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் இந்தியா இரண்டு வகையான பிரேதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் முதலாவது "பிரிட்டிஷ் இந்தியா" என்பதாகும். அது லண்டனில் இயங்கி வந்த இந்திய அலுவலகம் மற்றும் இந்தியாவின் கவர்னரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தது. இரண்டாவது "மன்னராட்சி நடக்கும் மாநிலங்கள்" ஆகும். இதில் மன்னர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் முடி சூடி நிலவுரிமை செலுத்தி வந்தனர். இதில் அப்பிரதேசங்கள் அவர்களது வாரிசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்யப்பட்டன. மேலும் பிரான்சு மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கூட்டணி ஆட்சி நடந்த சில காலனிப் பகுதிகளும் இருந்தன. இந்தியாவில் அப்போது இந்தப் பிரதேசங்களில் அரசியல் ஒருங்கிணைப்பே இந்திய தேசியக் காங்கிரஸின் குறிக்கோளாக இருந்தது, இந்த இணைப்பில் பாதுகாப்பு கருதி அவர்கள் படிப்படியாக இதனை செயல்படுத்தினர். அந்தப் பகுதிகளில் மத்திய அரசாங்கத்தின் ஆளுமையினை அவர்கள் விரிவுபடுத்தியிருந்தனர். மேலும் 1956 ஆம் ஆண்டு வரை அவர்களது நிர்வாகத்தினை அப்பகுதிகளில் மேற்கொண்டனர். மேலும் முன்னர் பிரிட்டிஷ் இந்தியா(/1)வின் கீழ் இருந்த பிரதேசங்கள் மற்றும் மன்னராட்சி நடைபெற்ற மாநிலங்களில் சில பகுதிகளுக்கு இடையில் சிற்சில வேறுபாடுகள் இருந்தன. அதே சமயத்தில் அரசியல் செயல்திறம் மற்றும் இராணுவம் ஆகியவற்றின் மூலம் இந்திய அரசாங்கம் நடைமுறைக்கேற்றவாறு மற்றும் சட்டப்படி மீதமுள்ள கூட்டாட்சிப் பிரதேசங்களின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி அவற்றையும் இந்தியாவுடன் இணைத்தது.

இந்த செயல்பாட்டின் மூலமாக மன்னராட்சி நடைபெற்ற பெரும்பாலான பகுதிகளை வெற்றிகரமாக இந்தியாவுடன் ஒருங்கிணைத்த போதும் சில மாநிலங்களில் இதனை வெற்றிகரமாக நிகழ்த்த இயலவில்லை. இதில் குறிப்பிடத்தக்கவை காஷ்மீர் மற்றும் ஐதராபாத் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மன்னராட்சி பகுதிகள் ஆகும்.

ஒருங்கிணைப்புக்கான காரணங்கள்

இந்த பரோடாவின் நிலப்படத்தில் 200 க்கும் மேற்பட்ட சுதேச அரசுகளின் இடமாக இருந்த குஜராத்தின் சௌராஷ்டிரா மற்றும் கத்தியவார் பகுதிகள் காணப்படுகின்றன. இதில் பல தொடர்ச்சியல்லாத நிலப்பரப்புகள் ஆகும்.

கிரிப்ஸ் திட்டம் வழங்கிய சலுகை போன்று, ஆற்றலை மாற்றுவதற்கான ஆங்கிலேய அரசின் ஆரம்ப காலத் திட்டங்களில், சில சுதேசி அரசுகள் சுதந்திர இந்தியாவுடன் இணையாமல் தனித்து நிற்கக் கோரலாம் என உணரப்பட்டது.

ஒருங்கிணைப்பை ஏற்றுக்கொள்ளுதல்

அரசர்களின் நிலை

சுதேச அரசுப் பகுதிகளை ஆண்ட ஆட்சியாளர்கள் அவர்களது பகுதிகளை சுதந்திர இந்தியாவுடன் இணைப்பதில் ஒருமித்த ஆர்வத்துடன் இல்லை. கொச்சின், பிகானர் மற்றும் ஜவஹர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த அரசர்கள் போன்ற சிலர் கொள்கை மற்றும் நாட்டுப்பற்று சார்ந்த அளவில் இந்தியாவுடன் இணைவதற்கு இசைந்தனர்.

மவுண்ட்பேட்டனின் பங்களிப்பு

ஆட்சி மாற்றத்திற்காக காங்கிரசுடன் ஒப்பந்த உடன்படிக்கையிலொ ஒரு முடிவை எட்டுவதற்கு, இந்தியாவுடன் சுதேச அரசுகளை இணைப்பது மிகவும் முக்கியம் என மவுண்ட் பேட்டன் நம்பினார். பிரிட்டிஷ் அரசரின் உறவினரான அவரை பெரும்பாலான சுதேச அரசர்கள் நம்பினர். குறிப்பாக போபால் நவாப்பான அமீதுல்லா கான்(Hamidullah Khan) உள்பட பல அரசர்களுடன் தனிப்பட்ட முறையில் நண்பராக இருந்தார். மவுண்ட்பேட்டன் பிரபுவே, ஒப்புக்கொள்ளக்கூடிய எந்த நிபந்தனைகளுக்கும் இணங்கி சுதந்திர இந்தியா உருவாக உறுதியளிக்கும் திறன் பெற்றவராக இருப்பார் எனவும் சுதேச அரசர்கள் நம்பினர். ஏனெனில் ஜவஹர்லால் நேருவும் (Jawaharlal Nehru), பட்டேலும் இவரிடம் குடியேற்ற இந்தியாவின் முதல் ஆளுநராக இருக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தனர்.

நெருக்கடியும் செயல்திறமும்

உள்துறை அமைச்சராக வல்லபாய் பட்டேல். பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளையும் சுதேச அரசுகளையும் இந்தியாவுடன் இணைப்பதற்கு இவர் பொறுப்பேற்றிருந்தார்.

சேர்வடைவு முறையாவணங்கள்

இணைத்தல் செயல்பாடு

எல்லையோரப் பகுதிகள்

ஜோத்பூரை ஆண்ட அன்வந்த் சிங், காங்கிரஸ் மீது வெறுப்புணர்ச்சி கொண்டவராக இருந்தார். மேலும் அவருக்கு இந்தியாவில் இணைந்தால் நல்ல எதிர்காலம் இருக்காது என்றோ அல்லது அவர் விரும்பிய வாழ்க்கை கிடைக்காது என்றோ கருதினார். அதனால் ஜெய்சால்மர் பகுதியை ஆண்ட மன்னருடன் இணைந்து பாகிஸ்தான் உருவாக்கத்திற்கு தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டிருந்த ஜின்னாவுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார். ஜின்னா, சில பெரிய எல்லையோரப் பகுதிகளை கவர்வதில் முனைப்புடன் இருந்தார். ஆகவே வங்காளம் மற்றும் பஞ்சாப் ஆகிய பகுதிகளில் பகுதியளவை இழந்ததற்கு ஈடு செய்யும் வகையில் பிற ராஜபுத்திர பகுதிகளை பாகிஸ்தானுடன் இணைப்பதற்கு முயற்சித்தார். இவர் ஜோத்பூருக்கும் ஜெய்சால்மருக்கும் பாகிஸ்தானுடன் இணைவதற்கான நிபந்தனைகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்தார். அதாவது அவர்களுக்கு ஒரு வெற்றுத் தாளைக் கொடுத்து அதில் அவர்களது நிபந்தனைகளை எழுதச் சொல்லி தான் அதில் கையெழுத்திடச் சம்மதித்தார்.

ஜம்மு காஷ்மீர்

இங்கு பச்சை நிறத்தில் காட்டப்பட்டிருப்பது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீர் பகுதியாகும். அடர் காவி நிறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிகள் இந்தியா நிர்வகிக்கும் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியாகும். இதில் அக்சை சின் பகுதி சீன நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது.

ஐதராபாத்

1909 ஆம் ஆண்டில் ஐதராபாத் மாநிலம். இதன் முந்தையப் பிரதேசங்கள் தற்போது ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இந்திய மாநிலங்களில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஒருங்கிணைப்பை நிறைவு செய்தல்

தற்போதைய சத்திஷ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவற்றின் பகுதிகளைக் கொண்டிருக்கும் மத்திய ஆட்சிப் பகுதிகள் மற்றும் பெரார். ஆங்கிலேயர் ஆண்ட மெட்ராஸ் ஆட்சிப்பகுதி மற்றும் அருகில் இருக்கும்.

துரிதமான ஒருங்கிணைப்பு

இந்தச் செயல்பாட்டின் முதல் படி 1947 ஆம் ஆண்டுக்கும் 1949 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் இந்திய அரசாங்கம், நிலைத்து நீடிக்கவல்ல நிர்வாக அமைப்புகாலாகக் கருதாத சிறிய மாநிலங்கள் அருகில் உள்ள மாநிலத்துடன் இணைக்கப்பட்டது அல்லது அடுத்த சுதேசப் பகுதியுடன் சேர்த்து "சுதேச ஒன்றியம்" உருவாக்கப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டது.

நான்கு படிநிலை ஒருங்கிணைப்பு

இணைத்தல்

பெருமளவிலான பெரிய பகுதிகள் மற்றும் சில சிறிய பகுதிகள் மாறுபட்ட நான்கு படிநிலைச் செயல்பாட்டின் மூலமாக இணைக்கப்பட்டன. பெரிய பகுதிகள் ஒரு குழுவாக இணைந்து "சுதேச ஒன்றியத்தை" உருவாக்குவதற்கு அவர்களை சம்மதிக்க வைத்தல் இந்தச் செயல்பாட்டின் முதல் படிநிலை ஆகும். இதற்காக இணைத்தலுடன் இணை உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இணைத்தலின் இணை உடன்படிக்கையின் கீழ் அனைத்து ஆட்சியாளர்களும் அவர்களது ஆட்சியை இழந்தனர். புதிய ஒன்றியத்திற்கு ராஜ்பிரமூகாக ஒருவர் இருப்பார்.

குடியாட்சிமயமாதல்

ஒவ்வொரு மாநிலத்திலும் நிர்வாக இயந்திரங்களை இணைத்து அவற்றை ஒரே அரசியல் மற்றும் நிர்வாக உறுப்பின் கீழ் ஒருங்கிணைப்பது என்பது சுலபமான ஒன்றல்ல. குறிப்பாக பல இணைக்கப்பட்ட பகுதிகள் முன்னர் போட்டி மனப்பான்மை கொண்டவையாக இருந்தன. முந்தைய மத்திய இந்திய நிறுவனத்தின் சுதேசப் பகுதிகள் விந்தியப் பிரதேசம் என்று அழைக்கப்பட்ட சுதேசப் பிரதேசத்தினுள் இணைக்கப்பட்டிருந்தன. அதில் இருந்த இரண்டு குழுக்கள் இடையே சிக்கல் ஏற்பட்டது. அதனால் ஏற்கனவே அவர்கள் கையெழுத்திட்டிருந்த பழைய இணைத்தல் ஒப்பந்தத்தை

இந்திய அரசு இரத்து செய்துவிட்டு அவர்களை புதிய இணைத்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வற்புறுத்தியது. மேலும் அந்தப் பகுதியை முதன்மை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது

ஆளுநர்களுக்கு

விவரிக்கப்பட்ட இந்த செயல்பாட்டின் விளைவாக, மாநிலங்களின் மீது இந்திய அரசாங்கத்தின் மேலதிகாரம் மிகவும் ஊடுருவலான வடிவத்தில் வலியுறுத்தப்பட்டது. இது அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு மேலதிகாரம் முடிவுக்கு வந்துவிடும் என ஆங்கிலேயர்கள் அறிக்கை விட்டிருந்ததற்கு முரணானதாக இருந்த போதும், சுதந்திர இந்தியா மேலதிகாரத்தை எப்படியும் பயன்படுத்த வேண்டியிருக்கும் என காங்கிரஸ் தொடர்ந்து உறுதியாக இருந்தது.

ஒருமுகப்படுத்தல் மற்றும் அரசியலமைப்புச் சட்டமாக்கம்

குடியாட்சிமயமாதலில் முந்தைய சுதேச அரசுகள் மற்றும் முந்தைய பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதிகளுக்கு இடையில் முக்கியமானதொரு வேற்றுமை தொடர்ந்து இருந்தது. அதாவது சுதேச அரசுகள் மூன்று விசயங்கள் மட்டுமே உள்ளடக்கிய வரம்புக்குட்பட்ட சேர்வடைவு முறையாவணத்தில் கையெழுத்திட்டிருந்ததால், மற்ற பகுதிகளின் அரசுக் கொள்கைகளில் இருந்து பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். இது அவர்களின் சமூக நீதி மற்றும் தேசிய மேம்பாடு ஆகியவற்றுக்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான திறனைத் தடுத்து நிறுத்தும் என காங்கிரஸ் கருதியது

ஒருங்கிணைப்புக்குப் பின்னர் ஏற்பட்ட சிக்கல்கள்

சுதேச சமஸ்தானங்கள்

சுதேச அரசுகளில் படிப்படியாய் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு பெருமளவில் அமைதியானதாகவே இருந்த போதும் இதனால் ஒரு சில மன்னர்கள் மகிழ்ச்சியடையாமலும் இருந்தனர். சேர்வடைவு முறையாவணம் நிரந்தரமானதாக இருக்கும் என பெரும்பாலானோர் எதிர்பார்த்தனர். மேலும் அவர்கள் சுயாட்சியை இழந்ததற்காகவும், அவர்களது பகுதிகளில் அவர்களுக்கு தொடர்ந்து வரும் என அவர்கள் எதிர்பார்த்திருந்த ஆதாயங்களை இழந்ததற்காகவும் மகிழ்ச்சியற்று இருந்தனர். சிலர் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த வாரிசுகள் மாநிலத்தை தொடர்ந்து ஆள்வதற்கு இயலாது என்பதைச் சுலபமாக எடுத்துக் கொள்ளவில்லை.

## சிக்கிமின் வரலாறு

சிக்கிமின் வரலாறு என்பது, 1642 ஆம் ஆண்டில் தற்போதைய வடகிழக்கு இந்தியா மற்றும் நேபாளத்தில் பல ஆட்சியாளர்கள் இருந்த போது நிறுவப்பட்ட ஒரு இராச்சியத்தின் காலத்திலிருந்து வருகிறது. அந்த சமயத்தில் இருந்த சிக்கிமானது தனி நாடாக இருந்து வந்தது அதன் அரசர் சோக்யால் அல்லது தர்ம ராஜா என அழைக்கப்பட்டார். இந்த நாடானது 1975 மே 16 வரை மன்னரின் ஆட்சியின் கீழ் சுதந்திர நாடாக இருந்தது. சுதந்திர சிக்கிம் நாட்டின் கடைசி மன்னராக பல்டன் தொண்டுப் நம்கையால் என்பவர் இருந்தார். 18 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், பிரித்தானியப் பேரரசானது திபெத்தில் வணிக வழித்தடங்களை நிறுவ முயன்றது, இது சிக்கிமை பிரித்தானியரின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. இது 1947 இல் அது சுதந்திரம்

பெறும் வரை நீடித்தது. ஆதன்பின் சிக்கிம் சுதந்திரமான நாடாக இருந்து, 1975 இல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

பூட்டான், நேபாளப் படையெடுப்புகள்

- 1670 ஆம் ஆண்டில் புன்ட்சோங் நம்க்யாலுக்குப் பிறகு அவரது மகன், டென்சுங் நாம்யால் என்பவர் ஆட்சிக்கு வந்தார்.
- இந்த சோக்யால் ஆட்சியில் நாடு அமைதியாக இருந்தது, நாட்டின் தலைநகரானது யூக்சோம் நகரிலிருந்து ரபெண்டெஸ் நகரத்துக்கு மாற்றப்பட்டது.
- அரசரின் இரண்டாவது மனைவியின் மகனான சக்டோர் நம்கியால், 1700 ஆம் ஆண்டு அரசாட்சி கைப்பற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரது ஒன்றுவிட்ட அக்காள் பெண்டியன்குமு, பூடானின் உதவியுடன் அவரை ஆட்சியில் இருந்து அகற்றினார்.
- 1700 முதல் 1706 வரை சக்டோர் நாம்கால் சிக்கிமை ஆண்டுவந்தபோது, சிக்கிம் மன்னர் மூன்றாவது சோகையால் என்பவர் படையெடுத்துவந்து சிக்கிமின் பெரும்பகுதியைக் கைப்பற்றினார்.
- சக்டோருக்குப் பின் அவரது மகன் கியுர்மத் நம்க்யால் 1717 இல் ஆட்சிக்கு வந்தார். கியுர்மத் நம்க்யால் ஆட்சியில் நேபாளம் மற்றும் சிக்கிமுக்கு இடையே பல சண்டைகள் நடந்தன.
- சீனாவின் உதவியுடன் அவரது மகன் துஷ்புது நாம்யாலை 1793 ல் சிக்கிமுக்கு திரும்பினார். அவர் தன் தலைநகரை டும்லொங்கிற்கு மாற்றினார்.

பிரிட்டிஷ் பேரரசுடன் உறவு

அருகில் உள்ள இந்தியாவுக்கு பிரித்தானியர் வந்தனர். நேபாளத்தின் கோர்கா இராச்சியத்தின் பொது எதிரியான பிரித்தானியரிடன் சிக்கிம் கைகோர்த்தது. இதனால் சிக்கிமை பழிவாங்க நேபாளப் படைகள் சிக்கிம் மீது தாக்குதல் நடத்தியது. இது ஆங்கிலேய-நேபாளப் போருக்கு தூண்டுதலாகி பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனி நேபாளத்தை 1814 இல் தாக்கத் தொடங்கியது. போரின் முடிவில் பிரிட்டிஷ் மற்றும் நேபாளத்திற்கு இடையே ஒப்பந்தமான - சுகாலி உடன்படிக்கையும், சிக்கிம் மற்றும் பிரிட்டிஷ் இந்தியா இடையே - டிலிடியா உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. 1817 இல் நேபாளத்தால் கைப்பற்றப்பட்ட சிக்கிமின் பகுதிகள் மீண்டும் சிக்கிமுடன் இணைக்கப்பட்டன.

சுதந்திர முடியாட்சி

சிக்கிம் தேசியக் கொடி

பிரிட்டனிடமிருந்து 1947 இல் சிக்கிம் சுதந்திரம் அடைந்தது. அதை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் முயற்சி நடைபெற்றது. ஆனால் இந்திய ஒன்றியத்தில் சேர்வதற்கு சிக்கிம் மக்களிடையே நடந்த பொது வாக்கெடுப்பு தோல்வியுற்றது. இதன்

பிறகு இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு சிக்கிமின் சிறப்புப் பாதுகாப்பிற்கு ஒப்புக் கொண்டார்.

சிக்கிமின் பிரதமர் டோரிஜி இந்திய பாராளுமன்றத்திற்கு மாநில பிரதிநிதித்துவம் வேண்டி முறையிட்டார். அப்போது இந்திய இராணுவம் தலையிட்டு சோக்யாலின் படைகளை முறியடித்துத் தலைநகர் கேங்டாக்கை தன் வசம் எடுத்துக்கொண்டது. அதைத் தொடர்ந்து 1975 ஏப்ரல் 14 அன்று சிக்கிமில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, அதில் பெரும்பான்மையான மக்கள் சோக்யால் அரசை மீண்டும் பதவியில் அமர்த்த விரும்பவில்லை. இதை இந்திய ஒன்றியத்துடன் இணைவதற்கானமறைமுக வாக்களிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 1975 ஏப்ரல் 26 அன்று சிக்கிம் இந்தியாவின் 22 வது இந்திய மாநிலமாக மாறியது. 1975 மே 16 அன்று, சிக்கிம் அதிகாரப்பூர்வமாக இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக மாறியது அதன் முதலமைச்சராக லீண்ட் டோர்ஜி ஆனார்.

இவ்வாறு சோழயலின் முடியாட்சி அகற்றப்பட்டு முடிவடைந்தது.1982 ஆம் ஆண்டு, பால்தன் தொண்டப்பு அமெரிக்காவில் புற்றுநோயால் இறந்தார்.

<u>இந்திய மாநிலம்</u>

1979 சட்டமன்றத் தேர்தலில் நாக பகதூர் பண்டாரி சிக்கிமின் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1984 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பண்டாரி வெற்றி பெற்றார். 1994 இல், பவன் குமார் சாம்லிங் சிக்கிமின் முதல்வராக ஆனார். பின்னர் 1999, 2004, 2009, 2014 தேர்தல்களில் வென்று ஆட்சி அமைத்துள்ளார்.

சீனா சிக்கிமை இந்தியாவால் ஆக்கிரமக்கப்பட்ட ஒரு நாடாகவே கூறிவந்தது. 2000-ல் பௌத்த மதத்தின் 17வது கரம்பா எனத் தலாய் லாமாவால் அறிவிக்கப்பட்டு, சீன அரசாலும் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப் பட்ட டோர்ஜே திபெத்திலிருந்து தப்பித்துச் சிக்கிம் மாநிலத்தில் உள்ள ரும்டெக் மடாலயத்துக்கு வந்தபோது சீனா கொந்தளித்தது.

2003-ல் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலம் என சீனா ஏற்றுக்கொண்டது. 2005 இல் நாதுலா மற்றும் செலப் லா கணவாய் ஆகிய கணவாய்களைத் திறக்க இரண்டு அரசாங்கங்களும் ஒப்புக்கொண்டன.

## இந்திய - சீன உறவுகள்

இந்திய-சீன உறவுகள் என்பது இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கு இடைப்பட்ட உறவுகளைக் குறிக்கிறது. இரு நாடுகளுக்கு இடையில் நல்லுறவு நீடிக்கின்றபோதிலும், சில நேரங்களில் எல்லைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இரு நாடுகளுக்கிடையிலான நவீன உறவானது 1950 ஆம் ஆண்டு தொடங்கியது. சீனக் குடியரசு (தைவான்) உடனான அதிகாரப்பூர்வ தொடர்புகளை முடித்துக் கொண்டு, சீன மக்கள் குடியரசை கண்டப் பகுதி சீனாவின் சட்டப்படியான அரசாங்கமாக கண்டுணர்ந்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அதிக மக்கள்தொகை கொண்ட முதல் இரண்டு நாடுகளாகவும் மற்றும் வேகமாக வளரும் உலகின் முக்கிய பொருளாதாரங்களாகவும் உள்ளன. இருநாடுகளின் தூதரக மற்றும் பொருளாதாரச் செல்வாக்கு அதிகரித்ததன் காரணமாக இவற்றின் இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான கலாச்சார மற்றும் பொருளாதார உறவுகள் பண்டைய காலங்களில் ஆரம்பித்ததாகும். பட்டுப்பாதையானது இந்தியா

மற்றும் சீனாவுக்கு இடையிலான முக்கியமான வணிகப் பாதையாக மட்டும் செயல்படவில்லை. இந்தியாவிலிருந்து கிழக்கு ஆசியாவுக்கு பௌத்த மதம் பரவுவதற்கும் அது உதவியாக இருந்ததென குறிப்பிடப்படுகிறது. 19 ஆம் நூற்றாண்டின் போது பிரிட்டனின் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனத்துடன் சீனாவின் வளர்ந்து வந்த அபினி வர்த்தகமானது முதல் மற்றும் இரண்டாவது அபினிப் போர்களுக்கு இட்டுச்சென்றது. இரண்டாம் உலகப்போரின்போது பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்த இந்தியா, மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளுமே சப்பானியப் பேரரசின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தியதில் முக்கியப் பங்காற்றின.

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இரண்டு நாடுகளும் சர்ச்சைக்குரிய பூடான்-சீன எல்லையில் டோக்லாம் என்ற இடத்தில் சிறு சண்டையில் ஈடுபட்டன. எனினும் 1980 களின் பிற்பகுதி முதல் இருநாடுகளும் வெற்றிகரமாக தூதரக மற்றும் பொருளாதார உறவுகளை மீள் உருவாக்கியுள்ளன. 2008 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா உருவானது. இரண்டு நாடுகளும் அவற்றின் மூலோபாய மற்றும் இராணுவ உறவுகளையும் விரிவாக்கம் செய்தன.

இந்திய வெளியுறவு கொள்கை அறிஞரான ரேசவுல் கரிம் லஸ்கரின் கூற்றுப்படி, "தற்போது இருநாடுகளும் சர்வதேச வர்த்தகம், காலநிலை மாற்றம் மற்றும் நிதி சார்ந்த உலக நாடுகளின் வரிசையின் சீர்திருத்தம் மற்றும் பிற பொதுவான ஆர்வமுடைய பகுதிகளை ஊக்குவிக்க ஒத்துழைத்து வருகின்றன".

<u>இருதரப்பு வர்த்தகம்</u>

<u>இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளி நாடு சீனா தான்.</u>

2014ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து சீனா ஐஅ$ 16.4 பில்லியன் (1,17,286.24 கோடி) மதிப்புடைய பொருட்களை இறக்குமதி செய்தது. இது சீனாவின் மொத்த இறக்குமதியில் 0.8% ஆகும். இது இந்தியாவின் ஒட்டு மொத்த ஏற்றுமதியில் 4.2% ஆகும்.

<u>இந்தியாவிலிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 10 முதன்மையான பொருட்கள்:</u>

பருத்தி இரத்தினங்கள், விலையுயர்ந்த உலோகங்கள், நாணயங்கள், தாமிரம், தாதுக்கள், கசடு, சாம்பல், கரிம வேதிப்பொருட்கள், உப்பு, கந்தகம், கல், சிமெண்ட், இயந்திரங்கள், விசையியக்கக் குழாய்கள், நெகிழி, மின்னணு உபகரணம் மற்றும் ரோம தோல்கள் தவிர மற்ற தோல்பொருட்கள்.

2014ஆம் ஆண்டு சீனாவிலிருந்து இந்தியாவுக்கு ஐஅ$ 58.4 பில்லியன் (4,17,653.44 கோடி) மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது சீனாவின் மொத்த ஏற்றுமதியில் 2.3% ஆகும். இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 12.6% ஆகும்.

<u>சீனாவில் இருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 10 முதன்மையான பொருட்கள்:</u>

மின்னணு உபகரணம், இயந்திரங்கள், விசையியக்கக் குழாய்கள், கரிம வேதிப்பொருட்கள், இரும்பு மற்றும் எஃகு, நெகிழி, இரும்பு அல்லது எஃகு பொருட்கள், இரத்தினங்கள், விலையுயர்ந்த உலோகங்கள், நாணயங்கள், கப்பல்கள், படகுகள், மற்றும் மருத்துவ, தொழில்நுட்ப உபகரணம்.

## இந்திய இலங்கை உறவுகள்

இந்திய - இலங்கை உறவுகள் என்பது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் இந்திய குடியரசு இடையிலான இருதரப்பு உறவுகளைக் குறிக்கும். பொதுவாக இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நட்பு முறையில் தான் இருந்தது, ஆனால் இலங்கைப் போரினாலும் தமிழர்கள் இனப்படுகொலை நடந்ததாலும் இருதரப்பு உறவுகளில் விரிசல்கள் உள்ளன. இந்தியாவிற்கு பாக் ஜலசந்தியால் பிரிக்கப்பட்ட அண்டை நாடு இலங்கை மட்டுமே; இந்தியாவிற்கு அருகில் இருக்கும் அண்டை நாடும் இலங்கை ஆகும். இரு நாடுகளும் ஏறத்தாழ 2500 ஆண்டுகளாக அறிவு சார்ந்த, பண்பாட்டு, மத மற்றும் மொழித் தொடர்பைக் கொண்டுள்ளன.

## தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு

(*South Asian Association for Regional Cooperation*, *SAARC*)

**தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு** அல்லது **சார்க்** என்பது தெற்காசிய நாடுகளுக்கிடையேயான நல்லுறவு, பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் முகமாக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.

தெற்காசியாவின் 8 நாடுகள் இவ்வமைப்பில் முழுமையான அங்கத்துவ நாடுகளாக உள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, நேபாளம், மாலத்தீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளினால் உருவாக்கப்பட்டது.

ஏப்ரல் 2007 இல் இடம்பெற்ற இவ்வமைப்பின் 14வது உச்சி மாநாட்டில் ஆப்கானிஸ்தான் இதன் 8வது உறுப்பு நாடாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.

எதிர்கால உறுப்பு நாடுகள்

- மக்கள் சீனக் குடியரசு சார்க்கில் இணையும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. பாகிஸ்தானும் வங்காளதேசமும் இதற்கு ஆதரவளித்தாலும் இந்தியா இன்னமும் தனது ஆதரவை வெளிப்படுத்தவில்லை. பூட்டான் சீனாவுடன் இதுவரை தூதரக உறவைப் பேணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- ஈரான் வெளிநாட்டமைச்சர் கமால் கராசி பெப்ரவரி 22 2005 இல் சார்க்கில் ஈரான் இணையும் விருப்பத்தை தெரிவித்தார்
- ரஷ்யா இவ்வமைப்பில் பார்வையாளராக இருக்க விருப்பம் தெரிவித்துள்ளது. இந்தியா இதற்கு ஆதரவளித்துள்ளது
- மியான்மார் பார்வையாளராக விருப்பம் தெரிவித்துள்ளது
- ஆஸ்திரேலியாவும் மொரீசியஸ் உடன் சேர்ந்து பார்வையாளராக இருக்க விருப்பம் தெரிவித்துள்ளது
- மொரீசியஸ் பார்வையாளராக இருக்க விருப்பம் தெரிவித்துள்ளது

- <u>தென்னாபிரிக்கா</u> கூட்டங்களில் பங்கு பற்றியிருக்கிறது.

## இந்திய வெளியுறவுக் கொள்கை

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கான அடிப்படை ஜவகர்லால் நேரு அவர்களால் மிக வலுவாக இடப்பட்டது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கூறுகளாக இவர் குறிப்பிடுவது

1. உலக அமைதி
2. அணி சேராமை
3. அடிமை மக்கள் விடுதலை பெறுதல்
4. இனவேற்றுமை ஒழித்தல்
5. தனி நபர் மற்றும் தேசிய விடுதலையைக் கட்டிக் காத்தல்
6. உலகின் பெரும்பகுதி மக்களைப் பிடித்து வாட்டும் ஏழ்மை, நோய் ஆகியவற்றைப் போக்குதல்
7. உலக அமைதி
8. அணி சேராமை
9. அடிமை மக்கள் விடுதலை பெறுதல்
10. இனவேற்றுமை ஒழித்தல்
11. தனி நபர் மற்றும் தேசிய விடுதலையைக் கட்டிக் காத்தல்
12. உலகின் பெரும்பகுதி மக்களைப் பிடித்து வாட்டும் ஏழ்மை, நோய் ஆகியவற்றைப் போக்குதல்

********************